**2026 ஏப்ரல் மாதம் 02– ஆம் தேதி வியாழக்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**எம் .சி .ஓ .பி. நெம்பர் : 97/2022**

MCOP No.: 97/2022 – கார்த்திக்கேயன் PW1 02.04.2026
த/பெ.பால்ராஜ்

**சாட்சி அழைக்கப்பட்டு, 1ம் எதிர்மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. இவ்வழக்கின் விபத்து திடீரென ஏற்பட்ட பனிமூட்டத்தின் காரணமான ஏற்பட்டது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் பனிமூட்டத்தினால் ஏற்பட்ட விபத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், விபத்து நடந்த சமயத்தில் எனக்கு வலது கண்ணில் காயம் ஏற்பட்டிருந்தது, போலீசார் விசாரித்தப்போது விபத்து நடந்த சுற்றுச்சூழலை அவ்வாறு சொன்னேன். விபத்து சம்பந்தமாக 1ம் எதிர்மனுதாரர் மீது குற்ற வழக்கு நடந்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். விபத்தினால் 1ம் எதிர்மனுதாரருக்கு காயம் ஏற்பட்டு, நீண்ட நாட்களாக சிகிச்சையில் இருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2. 1ம் எதிர்மனுதாரர் மீது நடந்த குற்ற வழக்கில் 1ம் எதிர்மனுதாரர் குற்றவாளி இல்லை என தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், என்னிடம் காட்டப்படும் J.M.No.II, Kodaikannal நீதிமன்ற வழக்கு எண் சி.சி.எண்.365/2022, 27.02.2025ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு பற்றி எனக்கு தெரியும். அது **எ.ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1ம் எதிர்மனுதாரர் விடுதலை பெற்ற விபரம் எனக்கு தெரிந்திருந்தும் நிரூபணவாக்குமூலத்தில் குற்ற வழக்கு நிலுவையில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.12 ஆவணத்தில் தொழிலாளர் நலவாரிய உறுப்பினர் அட்டையில் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.16–ல் எனது தாயாருக்கு ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 2017 ஆண்டிற்குரியது என்றால் சரிதான். நிரூபணவாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ளதுபோல் எனது தாயார் விபத்து

சமயத்தில் ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் வேலை செய்ததற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் அரசு வேலையில் வேலை செய்ததற்காக ஆதாரம் தாக்கல் செய்துள்ளேன்.

4. எனது தாயார் தையல் வேலை மற்றும் கட்டிட வேலை செய்து வந்ததற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவினால் விபத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு விபத்து சமயத்தில் முறையான ஓட்டுநர் உரிமம் இருந்தது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் முறையாக காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

5. எனக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல, 1, 2 எதிர்மனுதாரர்கள் இழப்பீடு வழங்க வேண்டும். 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவினால் விபத்து நடைபெறாததால் 1ம் எதிர்மனுதாரரை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 02.04.2026 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.04.02 16:41:31 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
02.04.2026